**கரைதுறைப்பற்று பிரதேச சபை**

**முல்லைத்தீவு மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 28 பெப்ரவரி 2020 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 13 யூலை 2020 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 05 அக்டோபர் 2020 திகதியும் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் கரைத்துறைப்பற்று பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் கொள்கைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும்போதும் இவற்றினை சமர்ப்பிக்கும்போதும் பின்பற்றப்பட்டிருந்திருக்க வேண்டிய கணக்கீட்டுக் கொள்கைகள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டுக் கொள்கைகளினை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | சபையின் 2019ம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் விக்ரமநாயக்காவின் அட்டுறு கணககீட்டு கொள்கையின் அடிப்படையில் தயாரிக்கப் பட்டுள்ளதுடன் 2020 ம் ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்ற போது ஒவ்வொரு உருப்படிக்குமான கணக்கீட்டு கொள்கைகளும் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டு பிரயோகிக்கப் படுவதுடன் நிதிக்கூற்றுக்களிலும் எதிர்வரும் காலத்தில் வெளிப்படுத்தப்படும். |

**(ஆ) பொருண்மையான கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபைக்குரித்தான 17 வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கடந்த 01 தொடக்கம் 03 ஆண்டுகளாக நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டு வரப்பட்டிருக்காமையால் மீளாண்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் அவற்றின் பெறுமதிகள் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. | இவ் வாகனங்களின் பெறுமதிகள் கணிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவரப்பட நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | 2020ஆம் ஆண்டுக்கான வருடாந்த நிதிக்கூற்றுக்களில் பெறுமதி உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | கூட்டுமொத்தம் ரூபா 3,385,092 பெறுமதியான 2,330 அலுவலக உபகரணங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் தளபாடங்களும் பொருத்துக்களுமாகக் காட்டப்பட்டமையினால் நிதிக் கூற்றுக்களில் ரூபா 3,385,092 ஆல் தளபாடங்களும் பொருத்துக்களினதும் பெறுமதி கூட்டிக்காட்டப்பட்டிருந்த அதேவேளை அலுவலக உபகரணங்களின் பெறுமதி குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | சீர் செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப் படுவதற்கு நடவடிக்கை கள் எடுக்கப்படுதல் வேண்டும். | நடப்பாண்டில் மேற் குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும். |
| (iii) | கூட்டுமொத்தம் ரூபா 397,000 பெறுமதியான 6 பொறித் தொகுதி மற்றும் இயந்திர உபகரணங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் தளபாடங்களும் பொருத்துக்களுமாகக் காட்டப்பட் டிருந்தமையினால்நிதிக்கூற்றுக்களில் ரூபா 397,000 ஆல் தளபாடங்களும் பொருத்துக்களின் பெறுமதி கூட்டிக்காட்டப்பட்டிருந்த அதேவேளை இயந்திர உபகரணங்களின் பெறுமதி குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | சீர் செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப் படுவதற்கு நடவடிக்கை கள் எடுக்கப்படுதல் வேண்டும். | நடப்பாண்டில் மேற் குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும;. |
| (iv) | கூட்டுமொத்தம் ரூபா 364,380 பெறுமதியான 42 கணினி மற்றும் உதிரிப்பாகங்கள் மீளாய் வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் தளபாடங்களும் பொருத்துக்களுமாகக் காட்டப்பட்டிருந்தமையினால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 364,380 ஆல் தளபாடங்களும் பொருத்துக்களின் பெறுமதி கூட்டிக்காட்டப்பட்டிருந்த | சீர் செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | நடப்பாண்டில் மேற் குறிப்பிடப்பட்ட குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | அதேவேளை கணினி மற்றும் உதிரிப்பாகங்களின் பெறுமதி குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | | |
| (v) | கூட்டுமொத்தம் ரூபா 3,004,330 பெறுமதியான 786 அலுவலக உபகரணங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பொறித் தொகுதியும் இயந்திரங்களுமாகக் காட்டப்பட்டிருந்தமையினால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 3,004,330 ஆல் பொறித் தொகுதியும் இயந்திரங்களினதும் பெறுமதி கூட்டிக்காட்டப்பட்டிருந்த அதேவேளை அலுவலக உபகரணங்களின் பெறுமதி குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | சீர் செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப் படுவதற்கு நடவடிக்கை கள் எடுக்கப்படுதல் வேண்டும். | குறித்த பகுதிகளில் சுட்டிக் காட்டப்பட்ட அவதானிப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் திருத்துவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (vi) | கூட்டுமொத்தம் ரூபா 2,341,465 பெறுமதியான 80 கணினி மற்றும் உதிரிப்பாகங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பொறித் தொகுதியும் இயந்திரங்களுமாகக் காட்டப்பட்டிருந்தமையினால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,341,465 ஆல் பொறித் தொகுதியும் இயந்திரங்களினதும் பெறுமதி கூட்டிக்காட்டப்பட்டிருந்த அதேவேளை கணினி மற்றும் உதிரிப்பாகங்களின் பெறுமதி குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | சீர் செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | குறித்த பகுதிகளில் சுட்டிக் காட்டப்பட்ட அவதானிப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் திருத்துவது தொடர்பாக, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (vii) | கூட்டுமொத்தம் ரூபா 44,580 பெறுமதியான மூன்று அலுவலக வாகனங்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் பொறித் தொகுதியும் இயந்திரங்களுமாகக் காட்டப்பட்டிருந்தமையினால் நிதிக்கூற்றுக்களில் ரூபா 44,580 ஆல் பொறித் தொகுதியும் இயந்திரங்களினதும் பெறுமதி கூட்டிக்காட்டப்பட்டிருந்த அதேவேளை வாகனங்களின் பெறுமதி குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | சீர் செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டப்படு வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | குறித்த பகுதிகளில் சுட்டிக் காட்டப்பட்ட அவதானிப்புக்கள் நிதிக்கூற்றுக்களில் திருத்துவது தொடர்பாக, நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (viii) | மீளாய்வாண்டில் வடக்கு மாகாண பிரதம செயலாளரிடமிருந்து சபைக்கு கிடைக்கப்பெற்றிருந்த 2017 ஆம் ஆண்டுக்கான முத்திரைத் தீர்வைக் கட்டணங்கள் கூட்டுமொத்தம் ரூபா 3,896,185 கடந்த மூன்று ஆண்டுகளாக சபையின் நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | வருமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறையினை வினைத் திறனாக்குவதற்கும் இவ் வருமானத்தை உரியவாறு கணக்குகளுக்கு கொண்டு வந்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

**(இ). கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கூட்டுமொத்தம் ரூபா 224.72 மில்லியன் பெறுமதியான காணி, கட்டடங்கள், கிணறுகள், அரசிறைக் கடனாளிகள் மற்றும் சில்லறைக் கடன்கொடுத்தோர் கணக்கு மீதிகளுக்குரிய காணி உறுதிப்பத்திரங்கள், நில அளவை வரைபடங்கள் மற்றும் பெறுமதி மதிப்பீட்டுச் சான்றிதழ்கள், வரலாற்றுக் கிரயத் தாள்கள், வேலைக் கோவைகள் மற்றும் மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் என்பன கணக்காய்விற்குக் கிடைத்திருக்காமையினால் அவற்றினை கணக்காய்வில் திருப்திகரமாக ஏற்று சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | குறிப்பிடப்பட்டிருக்கும் எழுத்து மூல ஆவணங்க ளினைப் பெற்று உரியவாறு கோவைப்படுத்துவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக் கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | காணிகளுக்கான உறுதிப் பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அனுமதி கிடைக்கப்பெற்றதும் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். கட்டடங்களுக்கான பெறுமதிகளை புதிதாக மதிப்பிடவேண்டியுள்ளதால் எதிர்காலத்தில் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பொதுக் கிணறுகள் தொடர்பான ஆவணங்கள் கணக்காய்விற்காக நடப்பாண்டில் சமர்ப்பிக்கப்படும். |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களு டனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிர்வாக விதிகள்** | | | |
| (i) | அத்தியாயம் III இன் பிரிவு 24 | சபைக்குரித்தான வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் பட்டியல்களினை தயாரித்து அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்க நாளதுவரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக் கவில்லை. | சபைக்குரித்தான வீதிகள் மற்றும் ஒழுங்கைகளின் பட்டியல்களினைத் தயாரித்து அவற்றினை அரச வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | விரைவாக வர்த்தகமானியில் பிரசுரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | அத்தியாயம் III இன் பிரிவு 33 | சோலைவரி சம்பந்தமான கணிப்பீடொன்றினை மேற்கொள்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக் கவில்லை. | சோலைவரி கணிப்பிடப் படுவதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | இது தொடர்பான தொடர் நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படும். |
| **(ஆ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள்** | | | |
| (i) | இலக்கம் 110 | நட்டங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிரு க்கவில்லை. | நாளது வரைப்படுத்திச் செல்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | நடப்பாண்டில் இருந்து பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | இலக்கம் 454(2) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக் கவில்லை. | மின்சார உபகரணங்கள் பதிவேட்டினை பராமரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | நடப்பாண்டில் இருந்து பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (iii) | இலக்கம் 571 | 14 ஒப்பந்தகாரர் களினால் மேற்கொள் ளப்பட்டிருந்த 16 ஒப்பந்த வேலை களுக்குரிய பிடிபண வைப்புக்கள், 07 மீளளிக்கத்தக்க கேள்வி வைப்புக்கள், ஒரு வாடகை வைப்பு என்பவற்றின் கூட்டு மொத்தம் ரூபா 1,378,184 தொடர்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிரு க்காது கடந்த 01 தொடக்கம் 04 ஆண்டுகளாக பொது வைப்புக்கள் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தன. | காலங்கடந்த வைப்புக்கள் தொடர்பில் பரிசீலிக்கப்பட்டு உரிய காலத்தில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | கூட்டுமொத்தம் ரூபா 305,623 பெறுமதியான 04 வைப்புக்கள் மீளளி க்கப்பட்டுள்ளது. ரூபா 1,072,561 பெறுமதியான வைப்புக்கள் மீளளிக்கப்பட நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. |
| (iv) | இலக்கம் 770 மற்றும் 771 | மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபையின் அறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய பின் தொடர் நடவடிக் கைகள் எடுக்கப் பட்டிருக்கவில்லை. | வருடாந்த பொருட் கணக்கெடுப்பு தொடர்பிலான நடவடிக் கைகள் முடிவுறுத்தப் படுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | நாட்டில் ஏற்பட்ட அசாதாரன நிலமையினால் தொடர் நடவடிக்கைளை மேற்கொள்ளமுடியாமல் இருந்தது. எதிர் வரும் நாட்களில் மேற்கொள்ளப்படும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (v) | இலக்கம் 845(1) | உத்தியோகபூர்வ தொலைபேசிப் பதிவேடு பேணப் பட்டிருக்கவில்லை. | உத்தியோகபூர்வ தொலைபேசிப் பதிவேட்டினை உரியவாறு பராமரிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | நடப்பாண்டில் இருந்து பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (vi) | இலக்கம் 891(1) | பிணைகள் பதிவேடு பேணப்பட்டிருக் கவில்லை. | பிணைகள் பதிவேட்டினை தொடர்ச்சியாக உரியவாறு பராமரிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | நடப்பாண்டில் இருந்து பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| **(இ)** | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டி** | | | |
| | கைந்நூல் பிரிவு 5.4.12 | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி சபையினால் செலுத்தப்பட்ட பின்னர் அதன் விபரங்கள் அடுத்து வரும் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்துக்கும் அதன் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் அனுப்பப்பட்டிரு க்கவில்லை. | குறித்த கலண்டர் மாதத்தில் செலுத்தப் படக்கூடிய பெருமதி சேர்க்கப்பட்ட வரி தொடர்பிலான விபரங்கள் தொடர்ந்து வரும் கலண்டர் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னதாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு அதன் பிரதியொன்றினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் சமர்ப்பிப்பதற்கு சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | நடப்பாண்டில் இருந்து உரிய காலப்பகுதிக்குள் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படும். |
| **(ஈ)** | **திறைசேரி சுற்றறிக்கைகள்** | | | |
| (i) | 1978 திசெம்பர் 19 ஆம் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 502(2) | நிலையான சொத்துப் பதிவேடு பேணப்பட்டி ருக்கவில்லை. | நிலையான சொத்து பதிவேட்டினை தயாரித்து நாளதுவரைப்படுத்தி கொள்வதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | நடப்பாண்டில் இருந்து பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 2002 நொவெம்பர் 28 ஆம் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை. | கணினி உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக் கவில்லை. | கணினி உப பாகங்கள் மற்றும் மென் பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேட்டினை தயாரித்து நாளது வரைப்படுத்தி கொள்வதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | நடப்பாண்டில் இருந்து பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| **(உ)** | **அரசாங்க பெறுகைகள் வழிகாட்டி கோவை** | | | |
| (i) | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 2.11.2 | பெறுகைகள் குழுவின் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுக்களின் வருகைப் பதிவேடு பேணப் பட்டிருக்கவில்லை. | இவ் இரு குழுக் கூட்டங்களுக்குமான வருகைப் பதிவேட்டினை தொடர்ச்சியாக பராமரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | நடப்பாண்டிலிருந்து பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 2006 ஆம் ஆண்டின் பெறுகை வழிகாட்டி நெறியின் பிரிவு 2.14.1 | கேள்விகோரல் ஆவணங்கள் பதிவுத் தபால் மூலம் வழங்குனர்களுக்கு அனுப்பப்பட்டிருக்காது கடைக்கொள்ளல் முறையின் மூலம் 07 வழங்குனர்களிடம் கூட்டுமொத்தம் ரூபா 651,618 பெறுமதியான அலுவலக உபகரணங்கள், இயந்திர உபகரணங்கள், சுத்திகரிப்பு மற்றும் வாகன திருத்தங்கள் சேவைகள் நேரடியாக வழங்குனர்களிடம் விலைக்கேள்வி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு பெறப்பட்டிருந்த 15 சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன. | உரிய பெறுகை வழிகாட்டிக்கமைவாக கொள்ளல்கள் மேற்கொள்ளப்படல் வேணடும். | எதிர்காலத்தில் மேற்போன்ற தவறுகள் இடம்பெறாமல் தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| (iii) | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 5.2.1 | கேள்வி கோரல் பதிவேடு பேணப்பட்டிருக்க வில்லை. | கேள்விகோரல் பதிவேட்டினைத் தொடர்ந்து பராமரிப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | நடப்பாண்டில் இருந்து பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதிசார் மீளாய்வு

-------------------------------

### 2.1 நிதிசார் விளைவுகள்

--------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 28,361,154 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,295,430 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

--------------------------------------

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

--------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரிகள் | 587,500 | 367,360 | 367,360 | - | 442,500 | 441,223 | 441,223 | – |
| (ii) | வாடகைகள் | 16,642,000 | 16,787,207 | 16,642,430 | 316,861 | 17,402,500 | 16,761,854 | 16,761,854 | – |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,894,650 | 2,134,340 | 2,134,340 | - | 1,541,400 | 2,328,704 | 2,328,704 | – |
| (iv) | ஏனைய வருமானம் | 29,727,420 | 29,142,232 | 36,868,331 | 15,792,729 | 23,860,040 | 28,752,963 | 28,752,963 | 23,518,828 |
| | **மொத்தம்** | **48,851,570** | **48,431,139** | **56,012,461** | **16,109,590** | **43,246,440** | **48,284,744** | **48,284,744** | **23,518,828** |

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 31 திசெம்பர் 2019 இலுள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த வருமான நிலுவை கூட்டுமொத்தம் ரூபா 16,036,091 இனை 01 சனவரி 2019 இலிருந்த வருமான நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 23,690,912 மீளாய்வாண்டிற்கான மொத்த பட்டியலிடப்பட்டிருந்த வருமானம் ரூபா 48,431,139 மற்றும் | மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்படாதுள்ள வருமான நிலுவைகளினை இணக்கம் காட்டக்கூடியதாக கணக்குகள் தயாரிக்கப் படுவதுடன் நிதிக் கூற்றுக்களுக்கும் உரியவாறு கொண்டுவரப்பட்டிருக்க சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | 2019ஆம் ஆண்டிற்கான மீண்டுவரும் வருமானம் அரசிறைமானியம் உள்ளடங்கலாக ரூபா85இ574இ281.24 ஆகும். இவற்றினுள் 2019.12.31 வரை அறவிடப்படாமல் காணப்படும் வருமானம் ரூபா12இ787இ279.02 (அரசிறைமானியம் நீங்கலாக) இவற்றினுள் ரூபா 144இ777.04 நடப்பாண்டில் அறவிடப்படுள்ளது. மிகுதி ரூபா 12இ787இ279.02 பெற்றுக்கொள்வது |

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டில் சேகரிக்கப்பட்டிருந்த மொத்த வருமானம் என்பவற்றுடன் தொடர்புபடுத்திப் பரீட்சித்து அதன் உண்மையானதும் செம்மையானதுமான தன்மையினைக் கணக்காய்வில் திருப்திகரமாக ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | | தொடர்பாக உரிய அலுவலகங்களுக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இவற்றினை பெற்றுகொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் 2018ம் ஆண்டுக்கான வருமானம் ரூபா 20இ368இ600.61 (அரசிறைமானியம் நீங்கலாக) 2019ம் ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் வவுனியாவில் இருந்து வரவேண்டிய முத்திரை தீர்வை விபரம் உரிய காலப்பகுதியில் எமக்கு கிடைக்கப்பெறாத காரணத்தினால் உரிய ஆண்டு கணக்குகளில் ரூபா 3இ896இ184.60 வருமானமாக காட்டப்படவில்லை. அத்தொகை கடந்த ஜனவரி மாதம் பெற்றுக்கொள்ளப்பட்டு நடப்பாண்டு வருமான செலவுக்கூற்றில் வருமானமாக காட்டப்பட்டுள்ளது. |

### 2.2.2 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 17 ஏப்ரல் 2009 ஆம் திகதிய 1597/8 இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் சபையின் எல்லைக்குள் அமைக்கப்பட்டிருந்த 11 தொலைத்தொடர்பு கோபுரங்களுக்கான அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்கல், பூர்வாங்கத்திட்டமிடல் அனுமதி, இசைவுச் சான்றிதழின் வழங்குகைகள் மற்றும் மேவுதல் அங்கீகாரம் ஆகிய நான்கு வகையான கட்டணங்கள் அறவீடு செய்யப்பட்டிராமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய கட்டணங்களின் கூட்டு மொத்தப் பெறுமதியும் கணிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவுமில்லை. | சபைக்குரித்தான வருமான நிலுவைகளைக் கணிப்பீடு செய்து அறவிடுவதற்கும் வருடாந்தம் அக் கட்டணங்களினை உரிய தரப்பினர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கும் அவற்றினை சபையின் நிதிக்கூற்றுக்களுக்குக் கொண்டுவருவதற்கும் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | மேற்குறிப்பிடப்பட்ட தொலைத்தொடர்பு கோபுரங்கள் மீள் குடியேற்றக் காலப்பகுதிக்கு முன்னர் இராணுவ முகாங்களுக்குள் அமைக்கப்பட்டிருந்த காரணத்தினால் அறவிடமுடியவில்லை. இருப்பினும் அதனுடன் தொடர்புடைய கம்பெனிகளுக்கு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.<br>நடப்பாண்டில் 17 ஏப்ரல் 2009 ஆம் திகதிய இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரகாரம் கட்டணம் அறவிடப்படும். |

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் | வடக்கு மாகாண பிரதம செயலாளரிடமிருந்து உரிய காலத்தினுள் பெற்றுக் கொள்வதற்கு சபையினால் | 2019 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவை ரூபா 15,792,730 பெற்றுக் கொள்வது தொடர்பாக உரிய அலுவலகங்களுக்கு கடிதம் அனுப்பி |

| | | |
|---|---|---|
| உள்ளவாறு ரூபா 12,949,400 தொகையான நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 2,843,330 தொகையான முத்திரைக் கட்டணங்கள் பெறப்பட வேண்டியிருந்தன. | நடவடிக்கைகள் பயன்மிக்க வகையில் எடுக்கப்படுதல் வேண்டும். | வைக்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் இவற்றினை பெற்றுகொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். 29.05.2020 அன்று ரூபா 1,356,993.00 முத்திரை வரி வடக்கு மாகாண திறைசேரியிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

#### (அ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டினை அடைவதற்கு தவறியமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 11 வீதி புனரமைப்பு செயற்பாடுகளின் செயலாற்றலுக்கு மீளாய்வாண்டில் ரூபா 9,703,439 தொகையொன்று சில்லறைக் கடனாளிகள் கணக்கில் ஏற்பாடு செய்யப்பட்டு செலவினமாகக் காட்டப்பட்டிருந்த போதிலும் எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் வெளியீட்டினை அடைந்து கொள்வதற்கான நடவடிக்கைகளினை மேற்கொள்வதற்கு நாளதுவரை சபை தவறியிருந்தது. | சபையின் வருடாந்த வரவுசெலவுத்திட்டம் மற்றும் ஆண்டுக்கான செயல் நடவடிக்கைத்திட்டம் என்பவற்றினை வினைத்திறனான வகையில் தயாரித்து அதற்கமைவாக அத்தகைய செயற்றிட்டங்களினை குறிப்பிட்ட காலத்தினுள் நிறைவேற்றி கொள்வதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளினை எடுத்தல் வேண்டும். | கூட்டுமொத்தம் ரூபா 2,807,030 பெறுமதியான 05 வேலை த்திட்டங்கள் நிறைவடைந்துள்ளது. 04 வேலைத் திட்டங்கள் யூன் மாத இறுதிக்குள் முடிவுறுத்தப்படும். ஒரு வேலைத்திட்டம் ஐ ீசழதநஉவ இல் உள்வாங்கப்பட்டதால் நிறுத்தப் பட்டுள்ளது. ஒரு வேலைத்திட்டம் அனுமதி பெறுவது தொடர்பாக கால தாமதம் ஏற்பட்டது. |

#### (ஆ) எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளினை (Out come) அடைவதற்கு தவறியமை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயல்நடவடிக்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட 02 செயற்பாடுகளின் செயலாற்றலுக்கு ரூபா 10,571,160 தொகையொன்று ஏற்பட்டதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட வெளியீடு (Output) அடைந்து கொள்ளப்பட்டிருந்த போதிலும் அவற்றின் மூலம் சிறுவர் | அச் செயற்றிட்டங்களின் மீது பிரயோகிக்கப்பட்டிருக்கும் பணப் பெறுமதிக்குரிய எதிர்பார்க்கப்பட்ட விளைவினைப் பெற்றுக் கொடுப்பதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக் கைகளினை விரைந்து எடுத்தல் வேண்டும். | உண்ணாப்பிலவு சிறுவர் பூங்காவானது எதிர்காலத்தில் சிற்றுண்டிச்சாலையாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.<br><br>வாராந்த சந்தை கட்டடத்தினுள் கடை ஒன்றினை நடாத்துவதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| பொழுதுபோக்கு மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற எதிர்பார்க்கப்பட்டவிளைவுகளினை கடந்த 04 தொடக்கம் 05 ஆண்டுகளாக அடைந்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2030 ஆம் ஆண்டளவில் நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளும் பொருட்டு சபையினால் நிறைவேற்றிக் கொள்ளக்கூடிய இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை அடைந்து கொள்வதில் நிலவும் இடைவெளிகளைப் போன்றே செயன் முன்னேற்றத்தை அளவிடுவதற்கான பொருத்தமான குறிகாட்டிகள் 2017 இன் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் கடந்த இரு ஆண்டுகளாக உருவாக்கப் பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் உருவாக்கப்பட்டு அவற்றின் வருடாந்த செயன் முன்னேற்றங்களை அறிந்து கொள்வதற்கான குறிகாட்டி களினையும் ஏற்படுத்திக் கொள்வதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் விரைந்து எடுக்கப்படுதல் வேண்டும். | பதில் வழங்கப்படவில்லை. |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

**(அ) பதவி வெற்றிடங்கள் மற்றும் மிகைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபைக்குரிய 14 ஆளணி வெற்றிடங்கள் நிரப்பப்பட்டி ருக்காமையினால் அத்தகையவர்களினால் முன்னெடுக்கப்பட்டிருந்திருக்க க்கூடிய சபையினது வேலைகள், அபிவிருத்தித் திட்ட செயல் நிறைவேற்றல்களில் தாமதங்கள் ஏற்பட்டிருந்தமை கணக்காய்வுக்கு அறியக் கொடுக்கப்பட்டிருந்தது. | இப் பதவியணியினரைப் பரவலாக்கல் மூலம் பெற்றுக் கொள்வதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | ஆளணிகளினை மீள் நிரப்புவதற்கான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ii) | ஆரம்பநிலை உத்தியோகத்தர் பதவியினுள் ஆயுர்வேத மருந்துக் கலவையாளரொருவர் அனுமதிக்கப்பட்ட ஆளணியினரை விட மேலதிகமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | சபையினால் உரியவாறு உள்ளீர்ப்புச் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | வடக்கு மாகாண உள்@ராட்சி ஆணையாளர் அவர்களின் அனுமதிக்கமைவாக குறித்த உத்தியோகத்தருக்கான மிகை ஊழியர் அடிப்படையில் மீள் நியமனம் வழங்கப்பட்டது. எனினும் அவரது தகுதிக்கான பதிவியில் உள்ளீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். |

**(ஆ) ஊழியர் கடன்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சேவையைவிட்டு நீங்கிய இறந்த மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த 07 அலுவலர்களது பதவியினர் கடன்நிலுவை கூட்டுமொத்தம் ரூபா 658,278 இனை கடந்த 11 வருடங்களாக அறவீடு செய்வதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXV இன் பிரிவு 4 இன் உப பிரிவு 4.2.4 இன் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்காது தொடர்ந்தும் நிலுவையாகவுள்ளன. | தாபன விதிக்கோவையின் அத்தியாயம் XXV இன் பிரிவு 4 இன் உப பிரிவு 4.2.4 இன் பிரகாரம் சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | குறித்த கடன் நிலுவைகள் தொடர்பான ஆவணங்கள் இன்மையால் வடக்கு மாகாண ஆளுநரின் அனுமதி பெறப்பட்டு பதிவழிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. |
| (ii) | வேறு அலுவலகங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த 03 அலுவலகர்களின் இடர்கடன் கடன் நிலுவை கூட்டுமொத்தம் ரூபா 137,167 இனை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் கடந்த 03 தொடக்கம் 05 ஆண்டுகளாக நலிவடைந்திருந்தன. | பதவியினர் கடன் நிலுவையினை முழுமையாகச் செலுத்து வதற்குரிய கோரிக்கையினை சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவருக்கு சமர்ப்பிப்பதற்கு சபையினர் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | கடன் நிலுவையானது தவணைக் கட்டணங்களாக தொடர்ச்சியாக செலுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. |
| (iii) | கூட்டுமொத்தம் ரூபா 191,946 பெறுமதியான 03 அலுவலகர்களது பதவியினர் கடன்களுக்கான மாதாந்த தவணைக் கட்டணங்கள் கடந்த 02 தொடக்கம் 03 ஆண்டுகளாக அறவிடப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | கடன் தவணைப்பணம் மற்றும் அதற்கான வட்டித் தொகையின் திரட்டு என்பவற்றினை உரிய வகையில் சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை கள் எடுக்கப்படுதல் வேண்டும். | கடன் நிலுவை அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப் படவுள்ளது. |

### 3.3 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இருவேறுபட்ட புனரமைப்பு மற்றும் புனர்நிர்மாண வேலைகளுக்கு இரண்டு ஒப்பந்ததாரர்களுக்கு மீளாய்வாண்டின் நொவெம்பர் மாதத்தில் கூட்டுமொத்தம் ரூபா 2.5 மில்லியன் சபை நிதியிலிருந்து முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் அவை 31 திசெம்பர் 2019 வரை தீர்ப்பனவு செய்யப்பட்டி ருக்காமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | சபைநிதியிலிருந்து மேற்கொள்ளப்படாத வேலை களுக்கு சபைநிதியிலிருந்து கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுதல் தவிர்க்கப்படுதல் வேண்டும். | மாகாணசபையில் இருந்து நிதி கிடைக்காத காரணத்தினால் தீர்ப்பனவு செய்யாமல் இருந்த போதிலும் நடப்பாண்டில் தீர்க்கப்படுள்ளது. |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 விளைவற்ற குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்த 03 வாகனங்கள் கடந்த 04 ஆண்டுகளாக பயன்படுத்தப்பட்டிராது களஞ்சியத்தில் விடப்பட்டுள்ளன. | திருத்தத்திற்குள்ளாக்கப்பட வேண்டியுள்ள வாகனங்களை உரிய காலத்தினுள் திருத்தம் செய்து பயன்பாட்டுக்கேற்றதாக மாற்றுவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | வாகனங்களை திருத்துவதற்காக வடமாகாண இயந்திரப் பொறியியலாளரின் அனுமதி பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளதுடன் திருத்துவதற்கு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது, மோட்டார் சைக்கிள் பதிவுப் புத்தகம் பெற நடவடிக்கையெடுக்கப்படும். |
| (ii) | சபையினால் உபயோகிக்கப்பட்டிராத கணனிகள் மற்றும் நிழற் பிரதி இயந்திர வகைகளுக்கென கூட்டுமொத்தம் ரூபா 89,450 பெறுமதியுடைய 13 ரோணர்கள், கொள்வனவு செய்யப்பட்டு கடந்த 03 வருடங்களாக பயன்பாடின்றி களஞ்சியத்தில் தேக்கி வைக்கப்பட்டிருந்தன. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மூலம் பரிசோதித்து அதனை பயன்பாட்டுக்கேற்றதாக வழங்கீடு செய்தல் அன்றேல் மிகை இருப்புக்கும் பழுது படலுக்குமான காரணங்களைக் கண்டறிந்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பயன்படுத்தப்படாமல் உள்ள ரோனர்களை வேறு அலுவலகங்களிற்கு பாவனைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

### 3.4.2 வருடாந்த பொருள்/ இருப்பு மெய்மையாய்வு

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான வருடாந்த பொருட் கணக்கெடுப்பு சபை அறிக்கையின் பிரகாரம் சபையின் முல்லைத்தீவு, முள்ளிவாய்க்கால் மற்றும் செம்மலை உப அலுவலகங்களின் 180 நூல் நிலையப்புத்தகங்கள் சோர்வாகக் காணப்பட்டிருந்தமை அவதானிக்கப் பட்டிருந்ததுடன் அதற்கான காரணங்கள் மற்றும் பின் தொடர் நடவடிக்கைகள் நாளதுவரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அச்சோர்வினை ஈடு செய்வதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் நிதி ஒழுங்கு விதி 104 இன் பிரகாரம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் | வருடாந்த பொருட் கணக்கெடுப்புச் சபை அறிக்கையின் பிரகாரம் சோர்வாகக் காணப்பட்ட புத்தகங்களிற்கான பெறுமதிகள் உரிய உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிடப் பட்டுள்ளன. |

### 3.4.3 சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தாமை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்டு சபையின் பயன்பாட்டிலுள்ள 10 வாகனங்களுக்குரிய வாகனப் பதிவுப் புத்தகம் பெறப்பட்டிருக்க கடந்த 08 வருடங்களாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகன பதிவு புத்தகம் பெறப்பட்டிருக்காது சபையினால் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனங்களுக்குரிய பதிவுப் புத்தகத்தினை பெற்றுக் கொள்வதற்கு சபையினால் விரைந்து நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | நான்கு வாகனங்களுக்கு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திடமிருந்து வாகன புத்தக அறிக்கை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பிறிதொரு வாகனத்திற்கு பதிவுப்புத்தக உறுதிப்படுத்தப்பட்ட பிரதி பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. ஏனைய நான்கு வாகனங்களுக்கான ஆவணங்களை பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ii) | அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களால் சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டிருந்த 03 வாகனங்களின் உரிமை பிரதேச சபைக்கு மாற்றம் செய்யப்பட்டிராது கடந்த 01 தொடக்கம் 07 ஆண்டுகளாக சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்தது. | தொலைக்கப்பட்டிருந்த உழவியந்திரத்தின் இழப்பு தொர்பில் நிதி ஒழுங்கு விதி 104 இற்கமைவாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் அத்துடன் சபைக்குரித்தற்ற நிலையில் காணப்படும் ஏனைய இரு வாகனங்களினையும் சபைக்குரித்தானவையாக மாற்றுவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | ஶ்ரீ சுடீ 4169 பதிவிலக்க உழவியந்திரம் 2013 இல் தொலைந்துள்ளதுடன் டுபு 3500,டுபு 3506 பதிவிலக்க வாகனங்கள் உரிமைமாற்றம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

3.5 பெறுகை

3.5.1 வழங்கல்கள் மற்றும் சேவைகள்

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | 01 பெப்ரவரி 2019 ஆம் திகதிய சபையின் பெறுகைக் குழு தீர்மானத்திற்கமைவாக கனொண் வகை கணினி அச்சுப்பதியி இயந்திரமொன்று ரூபா 18,400 விலையில் இரு இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்குப் பதிலாக மூன்று இயந்திரங்கள் வழங்குன ரொருவரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வில் அவதானிக்கப் பட்டது. எனவே சபையின் பெறுகைக்குழுவின் அனுமதி பெறப்பட்டிருக்காது ரூபா 18,400 இற்கு அச்சுப்பதிவு இயந்திரமொன்று மேலதிகமாகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | தேவைக்கு அதிகமான கொள்ளல்களினை ஏற்படுத்து வதனைத் தவிர்த்துக் கொள்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | எதிர்காலத்தில் மேற்போன்ற தவறுகள் இடம்பெறாமல் தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| (ii) | சபையின் பெறுகைக்குழுவின் அனுமதி பெறப்பட்டிருக்காது கூட்டுமொத்தம் ரூபா 225,421 பெறுமதிக்கு கணினி மற்றும் நகல் பிரதி இயந்திரங்களுக்கான 16 ரோணர்கள், கூரை மின்விசிறி மற்றும் காகிதாதிப் பொருட்கள் என்பன இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஐந்து சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப் பட்டன. எவ்வாறாயினும் இத்தகைய ரோணர்கள் மற்றும் உபகரணங்கள் தொடர்பிலான தொழில்நுட்ப மதிப்பீடுகளும் முறையாக நியமிக்கப்பட்டிருக்க வேண்டிய சபையின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் பரிசீலனைக் குட்படுத்தப்பட்டிருந்தமை தொடர்பிலான சிபார்சுகளும் கணக்காய்விற்கு கிடைத்திருக்கவில்லை. | சபையின் பெறுகைக்குழுவின் முறையான அங்கீகாரம் பெறப்பட்டு பொருட் கொள்ளல்கள் மேற்கொள்ளப் படுவதற்கும் தொழில்நுட்ப மதிப்பீடுகளுக்குட்படுத்தப்பட்டு கொள்வனவு செய்யப்பட வேண்டிய உருப்படிகளுக்கு அவ்வாறு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபார்சு பெறப்பட்ட பின் சபையின் பெறுகைக்குழுவின் அனுமதிக்கமைவாகக் கொள்வனவு செய்யப்படுவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | எதிர்காலத்தில் மேற்போன்ற தவறுகள் இடம்பெறாமல் தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்டிருந்த வேலைத்திட்டங்களில் 07 மூலதன வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டிராது கைவிடப்பட்டிருந்தன. இவற்றில் 06 வேலைத்திட்டங்கள் பெறுமதி மதிப்பிடப்படாத நிலையில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | சபையின் வருடாந்த வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்படும் வேலைத் திட்டங்களின் பெறுமதி பொருத்தமான அடிப்படைகளின் மூலம் மதிப்பிடப்பட்டு உள்ளடக்கப்படுவதுடன் பொதுமக்களின் பார்வைக்காக சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டிருக்கும் பாதீடுகளின் மாற்றங்களும் அவ்வாறு செயற்படுத்தப் படுவதற்கு சபையினால் நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | மகாவலி அபிவிருத்தி திட்டங்களுக்குள் உள்வாங்கப்பட்ட ஒரு வேலைத் திட்டத்திற்கான அனுமதி இதுவரை கிடைக்கவில்லை. ஏனைய 06 வேலைத்திட்டங்களுக்கும் பதிலாக வேறு வீதிகள் புனரமைப்பது என தீர்மானிக்கப்பட்டு வீதி புனரமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. |
| (ii) | சபையின் மீளாய் வாண்டிற்கான வரவு செலவுத்திட்டம் சரியான பொறிமுறையினூடாக திட்டமிட்டு தயாரிக்கப்பட்டி ருக்காமையால் நான்கு வகையான மதிப்பிடப்பட்ட செலவினம், உண்மைச் செலவினம் என்பவற்றிற் கிடையே சாதகமான வேறுபாடுகள் முறையே 16.4 சதவீதம் தொடக்கம் 61 சதவீதம் வரையிலும் நான்கு வகையான மதிப்பிடப்பட்ட வருமானம் உண்மை வருமானம், என்பவற்றிற் கிடையே பாதகமானதும் சாதகமானதுமான வேறுபாடுகள் முறையே 7 சதவீதம் தொடக்கம் 37.5 சதவீதம் வரையிலும் ஏற்பட்டிருந்தன. | சபையானது பொருத்தமான அடிப்படைகளைக் கருத்திலெடுத்து நடைமுறைக்குச் சாத்தியமான வருடாந்த வரவு செலவுத் திட்டத்தை தயாரித்து பொதுமக்களின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பித்து அவற்றினை வினையாற்றலுடன் செயற்படுத்துவதற்குரிய ஆக்கபூர்வமான நடவடிக்கைகளினை எடுத்தல் வேண்டும். | எதிர்வரும் ஆண்டுகளில் சரியான பொறிமுறை ஊடாக தயாரிப்பதன் மூலம் வேறுபாடுகள் தவிர்க்கப்படும். |
| (iii) | 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கூட்டுமொத்தமாக 106 மூலதன வேலைத்திட்டங்களை நிறைவேற்றுவதற்கான பாதீடுகள் தயாரிக்கப்பட்டு அவை சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் அவற்றில் கூட்டுமொத்தம் ரூபா 72.1 மதிப்பீட்டுப் பெறுமதியிடப்பட்டிருந்த 31 மூலதன வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிராது கடந்த 01 தொடக்கம் 05 ஆண்டுகளாக முற்றாகக் கைவிடப்பட்டிருந்தன. | சபையானது குறித்த வருடத்தினுள் சபை நிதியிலிருந்து செயற்படுத்தப்பட்டு நிறைவேற்றப்படக்கூடிய வேலைத் திடங்களினை மாத்திரமே வருடாந்த வரவு செலவுத் திட்டத்திலுள்ளடக்கப்பட்டு பொதுமக்களின் அங்கீகாரத்துடன் பயன்மிக்க வகையில் நிறைவேற்றக்கூடியதாக சாத்திய வள ஆய்வுகளினை மேற்கொண்டு உரிய காலத்தில் உரியவாறு செயற் படுத்துவதற்குரிய நடவடிக்கைகளினை மேற்கொள்ளல் வேண்டும். | PSDG, CBG வேலைகளுக்கு ஒதுக்கீடு கிடைக்கப் பெறவில்லை. 08 வேலைகள் வேறு திட்டத்திற்குள் உள்வாங்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.<br>03 வேலைகள் வருமானம் கிடைக்கப்பெறாமையினால் நடைமுறைப்படுத்தப்படவில்லை.<br>05 வீதி வேலைகளுக்குப் பதிலாக வேறு வீதிகள் புனரமைப்பு நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.<br>02 வேலைகள் 2020 இல் நடைமுறைப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் கூட்டுமொத்தம் ரூபா 18.38 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதியில் 21 வீதிகள் புனரமைப்புக்கள் சபையினால் அங்கீகரிக்கப் பட்டிருந்த போதிலும் அத்தகைய வீதிகள் ஒவ்வொன்றிற்குமான பூர்வாங்க மதிப்பீடுகள் தனித்தனியாக மதிப்பிடப்பட்டு பாதீடு தயாரிக்கப்பட்டிருக் காமையினால் இவ் வீதிகளுக்குரிய கூட்டுமொத்த மதிப்பீட்டுப் பெறுமதியினை கணக்காய்வில் திருப்திகரமாக ஏற்று பரிசீலிக்க முடியாதிருந்தது. | சபையின் வருடாந்த வரவு செலவுத் திட்டத்திலுள்ளடக்கப் பட்டிருக்கும் ஒவ்வொரு மூலதன வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் பூர்வாங்க மதிப்பீடுகள் தனித்தனியாக மேற்கொள்ளப் பட்டு மதிப்பிடப்பட்ட பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டு அதனடிப் படையில் பாதீட்டு செயற்பாடுகள் செவ்வனே நடைமுறைப்படுத்தப் படுவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | 2019 வரவு செலவுத்திட்டத்தில் 21 வீதிகள் புனரமைக்க திட்டமிடப்பட்டிருந்தது. ஆயினும் சபையின் நிதி ஏற்பாட்டினால் அவை 13 திட்டங்களாக மாற்றியமைக்க வேண்டியிருந் தமையினால் தீர்மான இல 107/18.07.19 ற்கமைய சபை அனுமதி யூலை மாதத்திற்கு பின்னரே கிடைக்கப் பெற்றதனால் சனசமூக நிலையங்களுக்கான ஒப்பந்தம் அதன் பின்னரே நிறைவேற்றமுடிந்தது. அத்துடன் சில வேலைத் திட்டங்கள் கம்பெரலிய திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டதனால் அதற்க்கு பதிலாக மாற்று வேலைத்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டியிருந் தமையினால் இவை ஐப்பசி கார்த்திகை மாதங்களில் ஒப்பந்தம் செய்யப்பட்டது. |

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் நடவடிக்கைகளை கணக்காய்வு செய்து வினைத்திறனான முறையிலும் அதன் செயற்பாடுகளை மேற்கொள்வதற்குமென உள்ளகக் கணக்காய்வு அலகொன்று உருவாக்கப்பட்டுள்ளபோதிலும் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சிநிரல் மற்றும் உள்ளகக் கணக்குப் பரிசோதனை அறிக்கைகள் என்பன கடந்த இரு ஆண்டுகளாக கணக்காய்விற்குக் கிடைத்திருக்கவில்லை. | உள்ளகக்கணக்காய்வு நிகழ்ச்சிநிரல் மற்றும் உள்ளகக் கணக்குப் பரிசோதனை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். | உள்ளககணக்காய்வு அலகு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அதனுடாக நடப்பாண்டில் உள்ளக கட்டுப்பாட்டு முறைகள் மற்றும் கணக்கு பரிசோதனை நிகழ்ச்சிநிரல் என்பன செயற்படுத்தப்படும். |